# திருக்குறளும் கல்வியும்

*முனைவர் இரா. இந்துபாலா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5012

## முன்னுரை

தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. இந்நூல்கள் அறம், அகம், புறம் என மூன்றாக பகுக்கப்பட்டுள்ளன. இதில் அறநூல் பதினொன்று, அகநூல் ஆறு, புறநூல் ஒன்று என்ற வகையில் அமைந்துள்ளது.

**"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணையும்
கால் கடுற் கோவை பழமொழி - மாமூலம்
இன்னிலை சொல் காஞ்சியோ டேலாதி என்பதூஉம்
கைந்நிலையு மாம்கீழ்க் கணக்கு"**

என்ற தனிப்பாடலின் வழி அறிய முடிகிறது. இப்பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் இடம் பெறும் கல்விச் சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பதினெண் கீழ்க்கணக்கில் திருக்குறள்

பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் பதினொன்றில் ஒன்றாக இந்நூல் விளங்குகிறது. இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர். இந்நூலில் 1330 குறட்பாக்கள் உள்ளன. 133 அதிகாரங்களாக பகுக்கப்பட்டு ஒவ்வொரு அதிகார விதம் பத்து குறட்பாப்களாக உள்ளன. கல்வி தொடர்பானக் கருத்துக்கள் கல்வி, கல்லாமை, வேள்வி போன்ற அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ளது.

## கல்வி என்பதன் பொருள்

மனித இனம் தன்னுடைய வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கிறது. உலகில் வாழக்கூடிய மக்கள் அனைவரும் வாழ்வாங்கு வாழ அடிப்படைக் காரணியாக விளங்குவது கல்வி. கல்வி எனும் சொல்லுக்கு பொருள் கூறும் போது கல்லுதல் என்பதன் பொருள் தோண்டுதல், கல் என்னும் அடிச்சொல்லிருந்து கலப்பை என்ற பெயரும், கல்வி என்ற பெயரும் வந்தன. நிலத்தைக் கிளறுவதற்குக் கலப்பை பயன்படுவது போல கல்லி கல்லுதல் என்பது மனத்தைக் கிளறித் திருத்திப் பயன்படுத்துவதாகும் என்கிறார் சித்பவானந்தா.

மேலும் கல்வி என்பதற்கு அறிவு, கற்றல், நூல், வித்தை, பயிற்சி, உறுதி, ஊதியம், கரணம், கலை, கேள்வி, சால்பு, தேர்ச்சி, விஞ்சை என்று கௌரா தமிழ் அகராதி விளக்கம் அளிக்கிறது (பக் 233) திருக்குறளில் 40வது அதிகாரமாக கல்வி அமைந்துள்ளது.

### குற்றம் இல்லாமல் நூலை கல்

கற்கும் நூல்களை குற்றமில்லாமல் கற்க வேண்டும் கற்ற பின் கற்ற கல்விக்குத் தக்கபடி நடக்க வேண்டும் இதனை,

***"கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக"***

***(குறள்:391)***

என்ற குறட்பா வழி அறிய முடிகிறது. மேலும் இக்கருத்தையே இனியவை நாற்பது என்ற நூலும் இயம்புகிறது இதனை,

***"பற்பல நாளும் பழுதி இன்றி பாங்குடைய***
***கற்றலில் காழினிய இல்"***

***(இனி.நா:பா.41:3-4)***

என்ற பாடல் வாயிலாக அறியலாம்.

### இரு கண்கள்

கணக்கெண்ணுதல், எழுத்தறிவித்தல் ஆகிய இரண்டும் மனிதன் நல்லறிவு அடைவதற்கு வழிகாட்டும் இரு கண்கள் போன்றவை என்கிறார் வள்ளுவர் இதனை,

***"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்என்ப வாழும் உயிர்க்கு"***

***(குறள்:392)***

என்ற குறள் சுட்டுகிறது.

### கற்றவரே கண்ணுடையவர்

எண்ணம் எழுத்தமே கண்களாவதால் கண்ணுள்ளவர்கள் என்று சொல்லத் தகுந்தவர்கள் கற்றவர்களே மற்றவர்களுடைய முகத்திலிருக்கும் கண்கள் புண்களுக்கே ஒப்பாகும். இதனை,

***"கண்ணுடையவர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு***
***புண் உடையோர் கல்லாதவர்"***

***(குறள்:393)***

என்ற குறளின் வழி அறிய முடிகிறது.

### ஆசிரியர் முன் தாழ்ந்து பணிய வேண்டும்

செல்வர் முன் வறியவர் நிற்பது போல ஆசிரியர் முன் தாழ்ந்து நின்று கல்வியைக் கற்றவர் உயர்ந்தோர். அவ்வாறு கல்லாதவர் தாழ்ந்தவர் இதனை,

***"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்***
***கடையரே கல்லா தவர்"***

***(குறள்:395)***

என்ற குறள் புலப்படுத்துகிறது.

### கற்கும் அளவு அதிகமாக வேண்டும்

கற்றவனாதவற்கு எவ்வளவு படித்தால் போதும் என்ற கணக்கில்லை எவ்வளவுக்கெவ்வளவு தோண்டுகிறமோ அவ்வளவுக்கவ்களவு மணற்கேணியில் நீர் ஊறுவதைப் போல் எவ்வளவுக்கெவ்வளவு அறிவு பெருகும் இதனை,

***"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு***
***கற்றனைத்து ஊறும் அறிவு"***

***(குறள்:396)***

என்ற குறட்பா மூலம் தெளிவுப்படுத்தியுள்ளார்.

### கல்லாமல் இருக்கக் கூடாது

எவ்வளவு படித்தாலும் நல்லது தான் என்பது மட்டுமல்ல, எத்தனை மொழிகளைப் படித்தாலும் நல்லது தான் எந்த நாடும் சொந்த நாடாகும் படியும் எந்த ஊரும் சொந்த ஊராகும் படியும் பல நாட்டு மொழிகளிலும் உள்ள பற்பல நூல்களையும் சாகிற கரையிலும் ஒருவன் படித்துக் கொண்டே இருந்தால் தான் என்னவென்று குறிப்பிடுகிறார். இதனை,

**“யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு”**

**(குறள்:397)**

என்ற குறளின் வழி அறியலாம்.

**கற்றவர்கள் கல்லாதவர்களின் சொல்லைக் கேட்க மாட்டார்கள்**

கல்லாதவர்களின் சொல்லை கற்றவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அறிவில்லாதவர்கள் ஆகையால் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதனை,

**“கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்**
**கொள்ளர் அறிவுடை யார்”**

**(குறள்:402)**

என்ற குறளின் வழி அறிய முடிகிறது.

**கல்லாதவன் தன்னை அறிஞர் என்ற கருதக் கூடாது**

கல்லாதவன் தன்னை அறிஞர் என்று மதித்துக் கொள்வது, கற்றவருடன் உரையாட அது கெட்டு விடும் இதனை,

**“கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்”**

**(குறள்:405)**

என்ற குறளின் வழி காணலாம்.

**கல்லாதவர் களர் நிலத்திற்குச் சமமானவர்கள்**

**“ஊரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லா தவர்”**

**(குறள்:406)**

கற்க வேண்டிய நூல்களைக் கற்று அறிவ பெறாதவர் உயிரோடு வாழ்பவர் என்று கூறும் அளவினரேயல்லாமல் தமக்கோ பிறர்க்கோ பயன்படாத உவர் நிலத்துக்கு ஒப்பாவார்.

**கல்லாமல் இருந்தால் குலம் கெடும்**

கல்வியானது கற்றவரை மட்டும் உயர்த்தாமல் அவர் குடியையும் உயரச் செய்யும் தன்மை கொண்டது. ஆகவே தான் வள்ளுவர்,

**“தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்”**

**(குறள்:67)**

என்று நவில்கிறார்.

**“மேற்பிறந்தோர் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு”**

**(குறள்:409)**

என்ற குறளானாது மேற்குடியில் பிறந்தவர் ஆயினும் கல்லாதார், தாழ்ந்த குடியிற் பிறந்த கற்றவரைப் போலப் பெருமை உடையவர் ஆகார்.

**கல்லாதவர்களை கற்றவர்களுடன் ஒப்பிடக்கூடாது**

**“விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்”**

சிறந்த நூல்களைக் கற்றறிந்தவரோடு ஒப்பு நோக்கக் கல்லாதவர் பகுத்தறிவுடைய மக்களோடு விலங்குகளுக்கு உள்ள வேறுபாட்டினை உடையவராவர்.

**முடிவுரை**

கல்வி என்பதன் பொருள், குற்றம் இல்லாமல் நூலை கல், இருகண்கள், கற்றவரே கண்ணுடையவர், கற்கும் அளவு அதிகமாக வேண்டும். கல்லாமல் இருக்கக் கூடாது. கற்றவர்கள் கல்லாதவர்களின் செ ால்லை ஏற்க மாட்டார்கள். கல்லாதவர் தன்னை அறிஞன் என்று கருதக் கூடாது. கல்லாதவர் களர் நிலத்திற்கு சமமானவர்கள். கல்லாமல் இருந்தால் குலம் கெடும், கல்லாதவர்களை கற்றவருடன் ஒப்பிடக் கூடாது போன்ற கல்வி தொடர்பான கருத்துக்களைப் பற்றி அறிய முடிகிறது.